# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24229 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| **முன்னிலை :** | **திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர்** |
| **மனுதாரர் :** | **திரு. சி. கோவிந்தராஜன்,<br>5/510, குமரன் நகர்,<br>அழகாபுரம் புதூர்,<br>சேலம் – 636 016,<br>சேலம் மாவட்டம்.** |
| **பொது அதிகார அமைப்பு :** | **பொதுத் தகவல் அலுவலர்,<br>பள்ளிக் கல்வித் துறை,<br>தலைமைச்செயலகம்,<br>சென்னை– 600 009.** |
| | **பொதுத் தகவல் அலுவலர்,<br>ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும்<br>பயிற்சி இயக்ககம்,<br>கல்லூரிச் சாலை,<br>சென்னை – 600 006.** |

-------

மனுதாரர் திரு. சி. கோவிந்தராஜன் , திரு. எஸ். பலராமன், பொதுத் தகவல் அலுவலர் / அரசு சார்புச் செயாலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச்செயலகம், சென்னை மற்றும் திருமதி. D. ரஞ்சனி தேவி, இணை இயக்குநர் ( நிர்வாகம்), ஆசிரியர்

கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 16.03.09 அன்று குறிப்பிட்ட மனுக்கள் குறித்து தகவல் வேண்டும் என்று தெரிவித்து பொதுத் தகவல் அலுவலர், பள்ளிக் கல்வித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களிடம் மனு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 25.09.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் 16.03.09 அன்று அனுப்பிய மனுவில் 38 மேல்முறையீட்டு விண்ணப்பம் ஒவ்வொன்றிற்கும் 38 தகவல்கள் வேண்டும் என்று தெரிவித்துள்ளதாக தெரிவித்தார். மனுதாரரிடம் குறிப்பிட்டு தகவல் கேட்டது குறித்து விசாரிக்கப்பட்டது. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு 38 தகவல்கள் வேண்டும் என்று தெரிவித்திருந்தாலும், குறிப்பிட்டு தகவல் கேட்கப்படவில்லை என்று தெரிகிறது. 23.12.09 அன்று பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்திற்கும், மனுதாரருக்கும் அனுப்பிய கடிதத்தில் மனுதாரரின் மனுக்கள் ஒரு பொருள் தொடர்புடையதால் அவை அனைத்தும் ஒரே கோப்பில் வைக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளதாக தெரிவித்தார். மேலும் மனுதாரரது மேல்முறையீட்டு மனு மீது இறுதி ஆணை வழங்கப்படாத நிலையில் இது தொடர்பாக கூடுதல் விவரங்கள் தெரிவிக்கப்பட இயலாத நிலை உள்ளது என்று தகவலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் மனுக்கள் ஒவ்வொன்றிற்கும் தகவல் வேண்டும் என்று தெரிவித்திருப்பது குறிப்பிட்டு என்ன தகவல் வேண்டும் என்று தெரிவிக்காத நிலையில் 23.12.09 அன்று இறுதி ஆணை வழங்கப்படவில்லை என்று தகவல் வழங்கப்பட்டுள்ளது. விசாரணையில் மனுதாரர் தெரிவித்தது போல அனைத்து மனுக்களுக்கும் இறுதி ஆணை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அது குறித்த தகவல் கேட்டிருப்பதாகவும் தெரிவித்திருப்பது இறுதி ஆணை வழங்கப்படவில்லை என்ற

தகவலாக தெரிவித்திருப்பதாக கருதப்படுகிறது. மனுதாரர் எதிர்பார்க்கும் இறுதி ஆணை வழங்கப்படவில்லை என்றும், மனுதாரருக்கு இறுதி ஆணை பிறப்பித்து தகவல் அளிக்க இயலாத நிலையிலும், மனுதாரருக்கு ஆவணங்களில் உள்ள தகவல்கள் வழங்கப்பட்டதாக முடிவு செய்யப்பட்டு இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். 24229/09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை– 600 009.

பொதுத் தகவல் அலுவலர்,
ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி இயக்ககம்,
கல்லூரிச் சாலை,
சென்னை – 600 006.

திரு. சி. கோவிந்தராஜன்,
5/510, குமரன் நகர்,
அழகாபுரம் புதூர்,
சேலம் – 636 016,
சேலம் மாவட்டம்.